# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## பயிற்சிப் பரீட்சை – 02

**கிறிஸ்தவம்** | **க.பொ.த. சாதாரணதரம் 2024 (2023)**


### பகுதி I

**மிகப் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க.**

01) “நீதியோடும் நேர்மையோடும் ஆட்சி புரிந்து அதை நிலை பெயராது உறுதிப்படுத்துவார்” எனும் இறைவாக்கில் மெசியாவின் முக்கிய குணாதிசயங்களாக வெளிப்படுபவை.
(1) அன்பும் நீதியும் (2) மெசியாவின் வருகையும் ஆட்சியும்
(3) நீதியும் நேர்மையும் (4) உறுதியும் நம்பிக்கையும்

02) “மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிடமகனுக்கு அதிகாரம் உண்டு” என்பதை இயேசு வெளிப்படுத்தியது,
(1) முடக்குவாதமுற்றவரை குணமாக்கிய போது
(2) இலாசரை உயிர்ப்பித்த போது
(3) பார்த்திமேயுவுக்கு பார்வை அளித்த போது
(4) கூன் விழுந்த பெண்ணை சுகமாக்கிய போது

03) இயேசுவின் உருமாற்றத்துடன் தொடர்புடைய கூற்று,
(1) “உங்களுக்கு அமைதி உரித்தாகுக.”
(2) “படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்”
(3) “என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்”
(4) “இவரே என் மைந்தர், நான் தேர்ந்து கொண்டவர் இவரே, இவருக்கு செவிசாயுங்கள்”

04) உரோமப் பேரரசின் கீழ் யூதர்கள் அனுபவித்த துன்பம் அல்லாதது,
(1) மத சுதந்திரமின்மை (2) அந்நியர் ஆட்சி
(3) வரிச்சுமை (4) பொருளாதார ரீதியான துன்பம்

05) இயேசுவின் பிறப்புப் பற்றி இறைவாக்குரைத்தவர்கள்.
(1) எசாயா, மீக்கா (2) மீக்கா, எரேமியா
(3) எசாயா, யோவேல் (4) எரேமியா, யோவேல்

06)

| A | B | C | D |
|---|---|---|---|
| கூனல் பெண் | சக்கேயு | தொழுநோயாளி | இரத்தப்போக்குடைய பெண் |

ஆபிரகாமின் பிள்ளைகள் என்று இயேசுவால் கூறப்பட்டவர்கள்,
(1) B,C (2) A, C (3) A, B (4) A, D

07) இயேசு செய்த முதலாம் அருளடையாளம்.
(1) பேதுருவின் மாமி சுகப்படல் (2) நீரைத் திராட்சை இரசமாக்கல்
(3) தொழுநோயாளி சுகப்படல் (4) அசுத்த ஆவியை விரட்டல்



kalvi.lk

08) இறையரசை விளக்குவதற்காக இயேசு உபயோகித்தது,
(1) உருவகம் (2) உவமை (3) இயற்கை (4) அதிகாரம்

09) சாலோம் என்னும் எபிரேய சொல்லின் பொருள்,
(1) சமாதானம் (2) அன்பு (3) விசுவாசம் (4) ஒற்றுமை

10) கொரிந்தியர் திருமுகத்தை எழுதியவர்.
(1) லூக்கா (2) பவுல் (3) யூதா (4) திமோத்தேயு

❖ **கீழே தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 16 – 20 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

A - "பிதாவே உமது கரங்களில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்"
B – "என் விருப்பப்படி அல்ல உம் விருப்பப்படியே நிகழட்டும்"
C – பிலாத்து
D – பேதுரு
E – யோவான்

11) "நீர் யூதரின் அரசனா?" என இயேசவை வினவியவர்.
(1) C (2) D (3) E (4) A

12) இயேசு சிலுவையில் கூறிய இறுதி வார்த்தை.
(1) A (2) B (3) C (4) D

13) "நீர் கடவுளின் மெசியா" என அறிக்கையிட்டவர்.
(1) C (2) D (3) E (4) B

14) ஒலிவ மலையில் இயேசுவின் வேண்டுதலாக அமைவது,
(1) A (2) B (3) C (4) D

15) முதன்மை சீடர்களுள் அடங்குவோர்,
(1) D யும் E யும் (2) D யும் C யும் (3) C யும் E யும் (4) C யும் D யும் E யும்

16) இயேசுவின் பணியின் குறிக்கோள்கள் வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பம்.
(1) சமவெளிப் பொழிவின் போது
(2) சீடர்களின் அழைப்பின் போது
(3) இயேசுவின் தோற்ற மாறுதலின் போது
(4) நசரேத்து தொழுகைக்கூட பிரசங்கத்தின் போது,

17) கிறிஸ்தவர்களின் எதிர்பார்ப்பு என்பது,
(1) அறிவியலை வளர்ப்பது
(2) பணம் சம்பாதிப்பது
(3) இறையரசை உரிமையாக்கிக் கொள்வது
(4) இவ்வுலக நற்கிரியைகளைச் செய்வது


kalvi.lk

18) இயேசு யாருடைய வீட்டில் உணவருந்தும் போது பாவியான பெண்ணைச் சந்தித்தார்.
   (1) சீமோன் என்னும் பரிசேயன் வீட்டில்
   (2) சக்கேயு என்னும் பரிசேயன் வீட்டில்
   (3) நாத்தானியேல் வீட்டில்
   (4) பெத்தானியா மரியாள் வீட்டில்

19) சாதோக் வழி மரபில் தோன்றியவர்கள்.
   (1) பரிசேயர் (2) சதுசேயர்
   (3) யூத மதத்தலைவர்கள் (4) அரசர்கள்

20) "மசியாஹ்" என்பதன் பொருள் யாது?
   (1) அருள்பொழிவு பெற்றவர் (2) திருத்தூதர்
   (3) சீடன் (4) மேய்ப்பன்

21) பவுல் எபேசுவில் செய்த போதனையின் மையக்கருத்து.
   (1) திருமுழுக்கு எடுங்கள்
   (2) வேதத்தை கற்றுக்கொள்ளுங்கள்
   (3) மனிதக்கையால் செய்யப்பட்டவை தெய்வங்களல்ல
   (4) ஜெபம் செய்யுங்கள்

22) "ஆண்டவராகிய இயேசுவின் மேல் நம்பிக்கை கொள்ளும் நீரும் உமது வீட்டாரும் மீட்படைவீர்கள்" என பவுல் யாருக்கு கூறினார்.
   (1) சிறைக்காவலாளிக்கு (2) குறிசொல்லும் பெண்
   (3) லூக்கா (4) தீமேத்தேயு

23) தூக்கு நூல் குண்டின் காட்சியைக் கண்ட இறைவாக்கினர் யார்?
   (1) ஆபகூக் (2) ஏசாயா (3) ஆமோஸ் (4) மீக்கா

24) கல்லெறிந்து கொல்லப்பட்ட திருத்தூதன்.
   (1) பவுல் (2) ஸ்தேவான் (3) பர்னபா (4) சீலா

25) கீழ் காண்பவை யூத சமயச் சடங்குகளும் மரபுகளுமாகும்.
   A- திருமுழுக்கு C- பெயர் வைத்தல்
   B- விருத்தசேதனம் D- தூய்மைப்படுத்தல்
   இவற்றுள் இன்றைய கிறிஸ்தவர்கள் பின்பற்றுவன.
   (1) A யும் B யும் (2) A யும் C யும் (3) B யும் C யும் (4) C யும் D யும்

26) இயேசுவானவரின் திருப்பணியுடன் தொடர்புள்ள கடலின் மூன்று பெயர்களாவன,
   (1) கலிலேயாக் கடல், யோர்தான் நதி, மத்திய தரைக்கடல் என்பனவாகும்.
   (2) கலிலேயாக் கடல், பெத்சாய்தா குளம், மத்திய தரைக்கடல் என்பனவாகும்.
   (3) கலிலேயாக் கடல், மத்திய தரைக்கடல், திபேரியாக் கடல் என்பனவாகும்.
   (4) கலிலேயாக் கடல், திபேரியாக் கடல், கெனேசரேத்து ஏரி என்பனவாகும்.

27) அனைத்து வேறுபாடுகளையும் களைந்து, பிறருக்கு உதவி செய்வதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதற்கு இயேசுவானவர் உபயோகித்த உவமை.
   (1) பரிசேயனும் வரி தண்டுபவரும் (2) காணாமற்போன மகன்
   (3) நல்ல சமாரியன் (4) செல்வந்தரும் இலாசரும்



kalvi.lk

28) இலங்கையில், துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட பிள்ளைகளுக்கென கிறிஸ்தவ நிறுவனம் செய்ய வேண்டிய முக்கிய செயல்,

(1) பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் அறிவுறுத்தும் நிகழ்வுகளை நடத்துதலாகும்.

(2) பிள்ளைகள் வாழ்வதற்கு பணம் கொடுத்தலாகும்.

(3) அரசியலில் ஈடுபட்டு நிலைமையை மாற்றுவதாகும்.

(4) உண்மைகளை அதிகாரிகளுக்கு அறிவித்து புனர்வாழ்வு அளிப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்துவதாகும்.

29) இயேசுவின் நியாய விசாரிப்பிலிருந்து நாம் கற்கும் முக்கிய பாடமாவது,

(1) எப்போதும் சட்டம் நீதியைப் பிறப்பிக்கும்.

(2) விசாரணையின் போது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எல்லா சந்தர்ப்பங்களிலும் பேசுவதற்கு இடமளித்தல் வேண்டும்.

(3) சட்டத்தின் முன் நிறுத்தப்படுபவர்கள் யாவரும் விடுவிக்கப்படுபவர்.

(4) சில வேளைகளில் குற்றமற்றவர்களும் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்படலாம்.

30) வெறுமையான கல்லறை, ஆணியறையப்பட்ட கைகளிலும் பாதங்களிலும் உள்ள தழும்புகள் வெளிப்படுத்துவது,

(1) இயேசுவானவர் உயிரோடிருக்கிறார் என்பதாகும்.

(2) இயேசுவானவரின் துன்புறுத்தலைப் பற்றியதாகும்.

(3) இயேசுவானவர் சிலுவையில் அறையப்பட்டமையாகும்.

(4) இயேசுவானவரின் தோற்றம் மாறுதலாகும்.

31) இயேசுவானவர், குடும்பம் பற்றிய எண்ணக்கருவுக்கு புது வடிவம் கொடுத்தது,

(1) பன்னிரண்டு வயதில் பெற்றோருக்கு கீழ்படிந்திருத்தல் மூலமாகும்.

(2) சீடருக்கு குடும்ப செபத்தைக் கற்பித்தல் மூலமாகும்.

(3) இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி செய்பவர்களே எனது தாயும் சகோதரரும் ஆவர் என்று கூறியதன் மூலமாகும்.

(4) ஜெருசலேம் தேவாலயத்தில் வைத்து, தமது பிதா கடவுள் என்று கூறியதன் மூலமாகும்.

32) சமுதாயத்தில் இறைவனின் விழுமியங்களை நேரடியாக உணரச்செய்யும் வசனங்களில் சிறப்பானது யாது?

(1) ஆடம்பர ஆடைகளை அணிந்தவர்களையும் ஏழைகளையும் வேறுபடுத்தி பணி செய்வது

(2) நான் பசியில் இருந்தேன். நீங்கள் உணவு கொடுத்தீர்கள். நான் தாகமாக இருந்த போது குடிக்க கொடுத்தீர்கள்.

(3) அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும் அரசிற்கும் கீழ்ப்படிந்திருத்தல்.

(4) தமது வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதோடு சமுதாய நலனுக்காகச் செயற்படுதல்.

33) ஆதித் திருச்சபையின் வழிபாட்டு வாழ்வில் முக்கியத்துவமிக்க விடயங்களுடன் தொடர்பில்லாத ஒரு காரணி.

(1) சபத் சட்டங்களுக்கு ஏற்ப செயற்படுதல்.

(2) அப்பம் பிட்டலில் பங்குபற்றுதல்.

(3) செபத்தின் மூலம் ஒருவரின் வாழ்வைப் பலப்படுத்துதல்.

(4) திருமறை கற்றலின் படி வாழ்வை சீரமைத்தல்.

34) ஒற்றுமை பற்றி இயேசுவானவர் கூறியது.

(1) முழு உடலும், சரீரத்தின் தலையான இயேசுவில் ஒன்றுபட்டுள்ளது.

(2) யூதருக்கும் பிற இனத்தவருக்கும் இடையே இருந்த பிரிவினையின் நடுச்சுவர் இடிக்கப்பட்டது.

(3) இனி உங்களிடையே யூதர் என்றும் அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் ஆண், பெண் என்றும் வேறுபாடு இல்லை.

(4) “ஒரே மந்தையும் ஒரே ஆயரும்” என்ற நிலை ஏற்படும்.



kalvi.lk

35) புயற்காற்றின் மத்தியில் சிறைக்கைதியாக இருந்த பவுலின் முன்மாதிரியான செயற்பாடு, பிரச்சினைகளின் மத்தியில் செல்லும் கிறிஸ்தவர்களான எமக்கு எவ்வாற உதவுகின்றது?
(1) வாழ்வின் புயல்களைத் தவிர்க்க உதவுகிறது
(2) வாழ்வின் புயல்களின் மத்தியில் மட்டும் பிறரின் உதவியை நாட அறிவுறுத்துகின்றது.
(3) சமுதாயத்தில் பிரச்சினைகள் ஏற்படுத்துவோர் மீது குற்றம் சுமத்தி கூறுகின்றது.
(4) விசுவாசத்தில் உறுதியாயிருந்து, பிறரைத் தைரியப்படுத்த கூறுகின்றது.

36) கோபுரம் கட்டுதல், அரசர் போர் தொடுக்கப்போகும் முன்னர் என்பன பற்றிய இரண்டு உதாரணங்களின் மூலம், இயேசுவானவர் முன்வைக்கும் சவாலானது,
(1) தன்னலத்தை விட்டு செயற்படுதல்.
(2) தன் உயிரைத் தியாகம் செய்தல்.
(3) சீடனாகுவதற்கு முன்னர் தீர்மானம் எடுத்தலின் முக்கியத்துவம்.
(4) சிலுவையை எடுத்துக்கொண்டு முன் செல்வதற்கு ஆயத்தமாகுதலின் முக்கியத்துவம்.

37) ''ஐரேனியா'' என்றும் கிரேக்கச் சொல்லின் பொருள்.
(1) முழுமையான சமாதானம் (2) முழுமையான அன்பு
(3) யாவேயின் அன்பு (4) விசுவாசம்

38) ''தெய்வங்கள் மனித உருவில் நம்மிடம் இறங்கி வந்திருக்கின்றன'' இக்கூற்று பேசப்பட்ட இடம்.
(1) லீஸ்திரா (2) இக்கோனியா (3) பெருகை (4) கானான்

39) மோசேயின் வாழ்வில் காணப்பட்ட எந்த முக்கிய சிறப்பம்சத்தை நமது வாழ்விலும் மேற்கொள்ளலாம்?
(1) தமது குடும்பத்துடன் புதிய இடத்திற்கு இடம்பெயர்தல்.
(2) ஒருவர் தனது சொந்த திறமைகளில் முற்றிலும் நம்பிக்கை வைத்தல்.
(3) நிலையற்ற சூழ்நிலையிலும் தலைமைத்துவம் அளித்தல்.
(4) சுய நம்பிக்கையுடன் செயற்படுதல்.

40) ''அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர்.....'' இயேசுவின் இக்கூற்றை நிறைவு செய்யம் வசனத்தை தெரிவு செய்க.
(1) ஏனெனில் அவர்கள் விண்ணக அரசுக்கு நுழைபவர்கள்.
(2) அவர்கள் கடவுளின் பிரசன்னத்தில் இருப்பர்.
(3) அவர்கள் கடவுளைக் காண்பர்.
(4) ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுபவர்.



kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page